***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 21/2012**

P.W.1 திரு.அன்வர்பாட்ஷா த/பெ.அல்லாபிச்சை நாள் – 17.10.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1, 2 பிதிரவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள , வழக்கில் சொல்லியுள்ள தரப்பினர்களின் உறவுமுறைகள் சரியானவைதான் . என் தகப்பனார் அல்லாபிச்சைக்கு இரண்டு மகன்கள் , ஒரு மகள் என்றால் சரிதான் . இரண்டு மகன்கள் என்பது நானும் , 1-ம் பிரதிவாதியும் ஆவோம் . எங்களுக்கு ஒரு சகோதரி இருந்து வருகிறார் . என் சகோதரியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான் . என் சகோதரியை தரப்பினராக சேர்க்கதால் நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . அ-அட்டவணையில் கண்டுள்ள நான்கு கிராமங்களில் உள்ள சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான் . ஆ-அட்டவணை சொத்துக்கள் புதுக்கோட்டை திருக்கட்டளை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அ-அட்டவணை 22 அயிட்ட சொத்துக்களை தவிர இதர அயிட்ட சொத்துககளும் இருந்து வருகிறது என்றால் சரிதான் . அ-அட்டவணை 22 அயிட்ட சொத்துக்களை தவிர இதர அயிட்ட சொத்துக்கள் எவ்வளவு இருக்கிறது என்பது பற்றி குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. அ-அட்டவணை 22 அயிட்ட சொத்துக்களை தவிர இதர அயிட்ட சொத்துக்கள் இருப்பதாக நான் சொல்லியுள்ள நிலையில், அந்த இதர அயிட்ட சொத்துக்கள் என்னுடைய அனுபவத்திலும் இருக்கிறது, என்னுடைய சகோதரர் / 1-ம் பிரதிவாதி அனுபவத்திலும் இருக்கிறது என்று சாட்சி பதில் அளிக்கிறார் . ஆ-அட்டவணை சொத்து 2-ம் பிரதிவாதி நபிஷா பீவியின் கிரயச் சொத்து என்று சொன்னால் சாட்சி ஆமாம் , ஆனால் என்னுடைய சம்மதம்

இல்லாமல் 1-ம் பிரதிவாதி அவரது மனைவியான 2-ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரயம் செய்துவிட்டார் என்று சாட்சி பதில் அளிக்கிறார் . நாங்கள் இஸ்லாமியர் இனத்தை சார்ந்தவர்கள் என்று பதில் அளிக்கிறார். இஸ்லாமிய குடும்பத்தை சார்ந்த நாங்கள் இந்து வாரிசுரிமை சட்டப்படி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல . கிராமத்தில் உள்ள அ-அட்டவணை சொத்துக்களைப்பொறுத்து நானும் , 1-ம் பிரதிவாதியும் ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. நானும் சில சொத்துக்களை கிரயம் கொடுத்திருக்கிறேன் , அதேபோன்று 1-ம் பிரதிவாதியும் சில சொத்துக்களை கிரயம் கொடுத்திருக்கிறார் . நான் கிரயம் கொடுத்த சொத்து பத்திரங்களில் எனக்கு குடும்பத்தில் வாய்மொழியாக பாகம் பிரித்த சொத்தை கிரயம் கொடுப்பதாக கண்டு எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் சாட்சி பத்திர வாசகத்திற்காக அவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்று பதில் அளிக்கிறார் . நான் அவ்வாறு கிரயம் கொடுத்த பல பத்திரங்களில் சொத்தில் பாகம் பிரிக்கப்பட்டதாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சாட்சி சரியல்ல, வாசகத்திற்காக அவ்வாறு எழுதப்பட்டுள்ளது என்று பதில் அளிக்கிறார். நான் SSLC படிப்பு பத்திருக்கிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். நான் நிறைய Business செய்வதாக 1-ம் பிரதிவாதி சொல்லியிருந்தால் அது தவறு. அ-அட்டவணை சொத்தை பொறுத்து பல வருங்களுக்கு முன்பாகவே எனக்கும் , 1-ம் பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களை தான் பல நபர்களுக்கு நான் கிரயம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல . என்னிடம் கிரயம் வாங்கிய நபர்கள் அவரவர்கள் சொத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . நான் கிரயம் கொடுத்த சொத்துக்கள் என்னுடைய பாகத்திற்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றாலும் , அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ-அட்டவணையில் கூடுதலாக காண்பிக்கப்படாத இதர

அயிட்ட சொத்துக்கள் வாய்மொழி பாகத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல . 2-ம் பிரதிவாதி இஸ்லாமிய பெண்மணி, அவரது பெயருக்கு தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கிய சொத்தைப்பொறுத்து நான் பாகம் கோரியிருப்பது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல . ஆ-அட்டவணை சொத்து புதுக்கோட்டை திருக்கட்டளையில் உள்ள மனைப்பிரிவுகள் என்றால் சரிதான். ஆ-அட்டவணை சொத்தை 2-ம் பிரதிவாதி பல நபர்களுக்கு கிரயம் கொடுத்து , கிரயம் வாங்கிய நபர்கள் அதில் வீடு கட்டி குடியிருக்கிறார்கள் என்றால் சாட்சி சரிதான் , ஆனால் ஆ - அட்டவணை சொத்து குடும்பத்திற்காக நாங்கள் வாங்கிய சொத்து என்று பதில் அளிக்கிறார். குடும்பத்திற்காக 2-ம் பிரதிவாதி பெயருக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி 1-ம் பிரதிவாதி அவர் பெருக்கு இருந்த பத்திரத்தை அனுகூலமாக்கிக்கொண்டு அவரது மனைவியான 2-ம் பிரதிவாதிக்கு கிரயப்பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டார் என்று சாட்சி பதில் அளிக்கிறார் . நான் தாக்கல் செய்துள்ள கிரயப்பத்திரங்கள் அனைத்தும் ஆ -அட்டவணை சொத்துக்களை கிரயம் வாங்கிய நபர்களின் கிரயப்பத்திரங்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் எனக்கு பாகம் இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக நான் எந்தவித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . 23.07.2008 விடங்கன் மகன் பாஸ்கர் என்பவருக்கு ஒரு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். அதில் முதல் பக்கத்தில் நாங்கள் நான்கு பேரும் ஒரு பதிவு செய்யப்படாத பாகப்பத்திரம் எழுதி அதில் என் பெயருக்கு சொத்து ஒதுக்கப்பட்டதாக கண்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சாட்சி பாகம் பிரியவில்லை , எழுத்துக்காரர் அவ்வாறு வாசகம் எழுதியுள்ளார் என்று பதில் அளிக்கிறார். இந்த கிரயப்பத்திரத்தில் நான் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்துள்ளேன் என்று பதில் அளிக்கிறார் . பதிவு

செய்யப்பட்ட இந்த கிரய ஆவணத்திற்கு விரோதமாக நான் சாட்சியம் அளிப்பதற்கு தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*